1990 மார்ச் 23] [திரு. எம் அப்துல் லத்தீப்]

விலை சாராயமோ எதுவுமே எங்களுக்குத் தெரியாது. எங்களுடைய கொள்கை நாங்கள் வற்புறுத்திச் சொல்லக் கடமைப்பட்டவர்களாக இருக்கிறோம். அதற்காக உங்களை நான் குற்றம் சொல்லவில்லை. நான் முதலில் பேசிய பொருளாதாரக் கொள்கைகள் இங்கேயும் இருக்கின்றன. அதை நான் ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் கொள்கை வழியில் வாழ்கிற நாங்கள் இந்த அரசைக் கேட்பதற்கு கடமைப்பட்டவர்களாக இருக்கிறோம். தயவுசெய்து அண்ணாவினுடைய வழியில், பெருந்தலைவர் காமராஜ் அவர்கள் வழியில், மகாத்மா காந்தி அடிகள் அவர்கள் வழியில்; ஏன் எனக்குத் தெரியும் கலைஞருடைய உள்ளம் நீங்கள் ஏற்றுக்கொண்டிருக்கிற உங்களுடைய கொள்கை வழியிலே பூரண மதுவிலக்கு தமிழ்நாட்டில் அமல்படுத்தவேண்டுமென்று நான் உங்களிடத்தில் கேட்டுக்கொள்கிறேன். மதுவால் ஏற்படும் தீமைகள் ஏராளம். மதுவால் ஒரு சதவீத நன்மை விளைந்தாலும் அந்த ஒரு சதவீத நன்மைக்காக கள்ளச் சாராயத்தால் சமுதாயத்தில் ஏற்படுகிற குறைவுகளுக்கு, பொருளாதார நெருக்கடிகள் இவைகளையெல்லாம் ஏற்றுக்கொள்வதற்கு கடைமைப்பட்டவர்களாக இருக்கிறோம். எனவே, இந்த ஒரு கொள்கை எங்களுக்கு அடிப்படையாக ஏற்புடையது அல்ல. மற்றவர்கள் ஒருவேளை அரசியலுக்காக எதிர்த்து இருக்கக்கூடும். இது எங்களுடைய ஜீவாதாரமான அடிப்படையானக் கொள்கை. எனவே, இதற்கு முந்தியும் நாங்கள் இந்தப் பிரச்சினையிலே மாறுபட்டு இருக்கிறோம். இப்போதும் முழுமையாக உங்களிடத்திலிருந்து மாறுபடுகிற நிலை எங்களுக்கு ஏற்படுகிறது. எனவே, மாறுபடுகிறோம், இதை நாங்கள் எதிர்க்கிறோம் என்பதை உங்களுக்கு நான் எடுத்துச் சொல்லக்கடமைப் பட்டிருக்கிறேன். (மணியடிக்கப் பெற்றது) இதற்கான காரண காரியங்கள் இருக்கின்றன. அதை தனிப்பட்ட முறையில்நான் உணர்வேன். இருந்தாலும் தயவுசெய்து இதை புனர் பரிசீலனை செய்து பூரண மதுவிலக்கை தமிழ்நாட்டில் அமல்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, மாண்புமிகு பேரவைத் தலைவருக்கு நன்றி தெரிவித்து இதற்கு மேலும் நான் பேசுவது முறையல்ல என்ற காரணத்தால் விடைபெறுகிறேன். நன்றி. வணக்கம்,

7. அறிவிப்பு.

பேரவை அலுவல்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. பேரவையின் நிகழ்ச்சி நிரலில் கீழ்க்கண்டவாறு மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன் :

24–3–1990 (சனிக்கிழமை)	..	1990-91ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தின்மீது பொது விவாதம்—தொடரும்.

28–3–1990 (புதன்கிழமை)	..	வினாக்கள்-விடைகள் நேரம் இல்லை. (1) 1989-90 ஆம் ஆண்டிற்கான இறுதித் துணை நிதிநிலை அறிக்கையை பேரவைக்கு அளித்தல். (2) 1990-91 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தின்மீது பொது விவாதமும், பதிலுரையும்.
29–3–1990 (வியாழக்கிழமை)	..	மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும் தொடங்குதல். 25—சின்கோனா 45—காட்டுவளத்துறை 47—செய்தி, சுற்றுலா, திரைப் படத் தொழில் நுட்பவியல். 56—காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு.
30–3–1990 (வெள்ளிக்கிழமை)	..	ஏற்கெனவே அறிவித்தபடி. அதில் எந்த மாற்றமும் இல்லை.
31–3–1990 (சனிக்கிழமை) அன்று எடுத்துக் கொள்ளப்படுவது	..	(1) 1989-90 ஆம் ஆண்டிற்கான இறுதித் துணை நிதிநிலை அறிக்கையில் கண்டுள்ள துணை மானியக் கோரிக்கைகளுக்கான நிதி ஒதுக்கச் சட்ட முன்வடிவு ஆய்வு செய்தலும், நிறைவேற்றுதலும் (விவாதமின்றி) (2) மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி. 31—பழங்குடியினர், ஆதி திராவிடர் முதலியோர் நலன்.
1–4–1990 (ஞாயிற்றுக்கிழமை)	..	விடுமுறை.

*990 மார்ச் 23] [பேரவைத் தலைவர்]

2–4–1990 (திங்கட்கிழமை) மற்றும் 3–4–1990 (செவ்வாய்க்கிழமை) ..	17—கல்வி.
4–4–1990 (புதன்கிழமை) ..	ஏற்கெனவே அறிவித்தபடி அன்று வினாக்கள்—விடைகள் நேரம் இல்லை.
5–4–1990 (வியாழக்கிழமை) ..	21—மீனளம். 22—கால்நடை வளர்ப்பு.
6–4–1990 (வெள்ளிக்கிழமை) ..	26—கைத்தறியும், துணித் தொழிலும். 34—நகர்ப்புற வளர்ச்சி.

4–4–1990ஆம் நாளன்று மட்டும், பேரவை காலை 20–06 மணிக்குக் கூடும்.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை (24–3–1990) காலை 9-00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 13-09 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

32. 1977ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டமன்ற உறுப்பினர்கள் ஓய்வூதிய விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து பொதுத் துறையின் 2-1-1990ஆம் நாளிட்ட 2 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1951ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊதியங்கள் வழங்கல் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 20/1951[14 (3) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

33. தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனத்தின் 1988-89 ஆம் ஆண்டிற்கான இருபத்தி நான்காவது ஆண்டறிக்கை (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.] (தமிழ் மற்றும் ஆங்கிலம்).